# <u>நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி</u>
# <u>நகர்மன்ற சாதாரணக் கூட்டம்</u>

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நாள். 23.09.2024

**நகர் மன்ற தலைவர்**
**நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி.**

---

**பொருள் எண்.1**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – பொது பிரிவு இந்நராட்சியில் மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளான, சாலை பணிகள், வடிகால் பணிகள் மற்றும் இதர பொறியியல் பிரிவு சார்ந்த பணிகள், பொது சுகாதார பணிகள் பொதுப்பிரிவு பணிகள், அலுவலக பணிகள் ஆகிய மேற்கூறிய பணிகள் மேற்கொண்ட விதத்தில் வழங்கிய பட்டியல் தொகை கணக்குகள் மற்றும் நாள்தோறும் வசூல் செய்யும் சொத்துவரி, தொழில் வரி இதர இனங்களில் வசூல் செய்யும் தொகைகளின் வரவு கணக்குகள் (வரவு செலவு கணக்குகள்) வைப்புத் தொகை இருப்பு கணக்குகள் மேற்கூறிய அனைத்து இனங்களின் வரவு செலவு கணக்குகளின் 2023–24 ம் நிதியாண்டுக்கான பொது நிதி மற்றும் குடிநீர் நிதி என இரண்டு கணக்குகளாக மேற்கொள்ளவும் மேற்படி கணக்குகளின் EJV, CJV, PJV, GJV, BRV மான்யம் வரப்பெற்ற விவரங்கள் ஆகியவைகளை UTIS–ல் பதிவேற்றம் செய்தும், வைப்பு தொகை பதிவேடு, முன்பணம் பதிவேடு, சேமநலநிதி பதிவேடு ஓய்வூதிய பங்களிப்பு விவரங்கள் 2020–2021 முதல் 2023–2024 ஆம் ஆண்டு வரை உரிய தலைப்பில் பதிவேற்றம் செய்து, நகல் எடுத்து புத்தக வடிவில் தணிக்கை சமர்ப்பித்திடவும், மேலும் மேற்கண்ட பணிகள் அனைத்தும் தனியார் மூலம் மேற்கொள்ளவும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**
பணியின் அவசியம் கருதியும் மேற்படி பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.655/2024/பி1**

**தீர்மானம் எண் – 145 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.2**

செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – இந்நகராட்சியில் நடைபெற்ற பல்வேறு பணிகளில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து 2016–2017 முதல் 2021–22 வரை பெறப்பட்ட வைப்பு தொகை காலங்கடந்த நிதியாக கணக்கு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரர்களின் பணிகளில் ஏற்பட்ட தணிக்கை தடை இழப்புக்கான தொகையை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களின் காலாவதியான வைப்பு தொகையில் இருந்து ஈடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.655/2024/பி1**
**தீர்மானம் எண் – 146 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.3**

அரசு முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் முன்னிலையில் 11.06.2024 அன்று நடைபெற்ற 6வது கூட்ட அறிக்கையில் (Common Project Sanctioning and Monitoring Committee) நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21–ல் உள்ள கண்டிகை தாங்கல் குளம் (பிளாக் எண்.1,2,3) (சர்வே எண்.252) புதுப்பிக்கும் பணிக்கு ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பட்டு திட்டம் 2024–25–ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 25.07.2024 அன்று மாநில அளவில் மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டடு, 29.07.2024 அன்று Price Bid திறக்கப்பட்டு தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21–ல் உள்ள கண்டிகை தாங்கல் குளம் (பிளாக் எண்.1,2,3) (சர்வே எண்.252) புதுப்பிக்கும் பணி. | ரூ.136.00 | திரு.எல்.வெங்கடேசன் | - | 0.05% |
| | | | திரு.எல்.புண்ணியக்கோட்டி | 3.74% | - |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எல்.வெங்கடேசன் என்ற ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1204/ 2024/இ1**

**தீர்மானம் எண் – 147 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.4**

செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – இந்நகராட்சியில் 2008 முதல் 2023 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரியானது பிரிவு 194/C (Contractor and SubContractor) என்ற தலைப்பில் வருமான வரி துறைக்கு ஒவ்வொரு மாதமும் தொகை செலுத்தப்பட்டு ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறை (Quarterly) சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களின் PAN எண்ணை பதிவேற்றம் (E-Filling TDS) செய்யப்பட்டு வரிதாக்கல் செய்யப்படுகிறது. இந்நிலையில் இந்நகராட்சி பேரூராட்சியாக இருந்த காலத்தில் 2008 முதல் 2023 வரை வருமான வரி தலைப்பில் ரூ.3108770/– நிலுவையாக உள்ளது. மேற்படி தொகையினை உரிய அரசு தலைப்பில் செலுத்திட வருமான வரி துறை மூலமும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.34238/2017/அ2, நாள்.30.08.2024–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் வருமான வரி நிலுவைத் தொகை மற்றும் அபராத தொகையை செலுத்த வேண்டிய கட்டாய நிலை உள்ளது. மேலும் மேற்படி நிலுவை தொகை விவரங்களை பதிவிறக்கம் செய்து மேற்படி நிலுவைத் தொகையில் (Short Deduction) போன்ற குறைகளை நிவர்த்தி செய்து வருமானவரி நிலுவைத் தொகையில் உள்ள குறைகளை நீக்கம் செய்தும் மீதமுள்ள நிலுவைத் தொகையினை உரிய வருமானவரி துறைக்கு அரசு தலைப்பில் செலுத்திடவும் மேலும் மேற்படி பணிகளை இந்நகராட்சியில் TDS E-Filling செய்யும்

நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.50,000/– இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** – மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.1861/2024/ பி1**
**தீர்மானம் எண் – 148 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.5**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜி.எஸ்.டி சாலையில் (வார்டு எண்.11,புல எண்.358) மீன் அங்காடி கட்டிடம் கட்டுதல் பணி ரூ.217.00 இலட்சம் மதிப்பீட்டில் (கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2024–25 பங்குத்தொகை ரூ.108.00 இலட்சம் மற்றும் நகராட்சி பொது நிதி பங்குத்தொகை ரூ.109.00 இலட்சம்) கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2024–25 ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள 12வது கூட்ட அறிக்கையில் (12th Common Project Sanctioning and Monitoring Committee) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**ந.க.எண்.1244/2024/இ1**
**தீர்மானம் எண் – 149 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.6**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதியில் தினசரி மட்கும் குப்பைகள் 13.014 மெ.டன் மற்றும் 15.906 மெ.டன் மட்காத குப்பைகள் மொத்தம் 28.92 மெ.டன் குப்பைகள் உருவாகின்றன இந்நகராட்சியில் குப்பை கிடங்கு இல்லாத காரணத்தினால் இரண்டாம் நிலை சேகரிப்பு பணி கூட மேற்கொள்ள சிரமமான சூழல் உள்ளது 13.014 மெ.டன் மட்கும் குப்பைகளில் 5 மெ.டன் அளவுள்ள நுண்ணுர குடில் பகுதியில் செயலாக்கம் செய்ய கூடிய அளவில் உள்ளது மீதமுள்ள குப்பைகளை தேக்கமடையாமல் பொது சுகாதாரக் கேடு ஏற்படாமல் பாரிவாக்கம் ஸ்ரீ பத்மாவதி என்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு டாராஸ் வாகனம் மற்றும் JCB இயந்திரம் மூலமாக நவம்பர் 2024 மற்றும் டிசம்பர் 2024 ஆகிய காலத்திற்கு வாடகை அடிப்படையில் அமர்த்திடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 1883/2024/எச்1**

**தீர்மானம் எண் – 150 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.7**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான அரசு பள்ளிகளான காமராஜபுரம் முன் மாதிரி தொடக்கப்பள்ளி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (நந்திவரம்), ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி (கூடுவாஞ்சேரி), ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப்பள்ளி (நந்திவரம்) ஆகிய நான்கு பள்ளிகளில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ்** 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 01.09.2024 முதல் 31.08.2025 வரை ஒரு நபருக்கு ரூ.12.70/– காலை உணவு தயார் செய்து விநியோகம் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்ட நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.973/2022/இ1**
**தீர்மானம் எண் – 151 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.8**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு – திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவுகள் மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை, கட்டிடக்கழிவுகள் மேலாண்மை, மின்சாரக்கழிவுகள் மேலாண்மை, மருத்துவக்கழிவுகள் மேலாண்மை மற்றும் Hazardous Waste Management Rules 2016–ன் கீழ் சட்ட விதிகளை மீறுபவர்களுக்கு Spot Fine விதிக்கும் விதமாக சட்ட விதிகளின் கீழ் அபராதம் விதித்திட ஏதுவாக அபராத கட்டண ரசீது அச்சடித்திட 10 புத்தகம் 3 Leaf Triplicate Challan–உடன் 100 பில் கொண்ட புத்தங்கள் தேவைக்கேற்ப அவ்வப்போது உள்ளூர் விலைப்புள்ளி பெற்று அச்சடித்து வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/– மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 1879/2024/எச்1**

**தீர்மானம் எண் – 152 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.9**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட மகாலட்சுமி நகர் பிரதான சாலை முதல் அமுதம் காலணி வரை மாநில பேரிடர் மேலாண்மை (State Disaster Mitigation Fund) திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அப்பகுதியின் உள்ள சாலைகளில் வலது புறமாக (வடக்கு பக்கம்) உள்ள மின்கம்பங்களால் இப்பணியினை மேற்கொள்ள சிரமமாக உள்ளது. மேலும் இப்பணி குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,செங்கல்பட்டு அவர்கள் மேற்படி இடத்தில் நகராட்சி மூலம் மின் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு நகராட்சி ஆணையாளர் அவர்கள் இதுகுறித்து ஒப்பந்த படிவம் வழங்கி பணியினை நகராட்சி மூலம் மேற்கொள்ளலாம் என ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட ஜெயலட்சுமி நகர் பிரதான சாலை முதல் அமுதம் காலனி பிரதான சாலை (வடக்கு பக்கம்) வரை உள்ள மின் கம்பங்களை மாற்றி அமைக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**
**தீர்மானம் எண் – 153 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.10**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 2024–2025ஆம் ஆண்டில் DBC பணியாளர்களைக் கொண்டு குடியிருப்புகள் கணக்கீடு செய்யப்பட்ட விவரப்படி 17954 குடியிருப்புகள் உள்ளன.இதற்கு Plan–300 திட்டத்தின்படி 60 DBC பணியாளர்கள் தேவை.

இந்நகராட்சியில் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதால், நவம்பர் 2024 டிசம்பர் 2024 வரை உள்ள காலத்திற்கு, மேற்படி பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு அவர்களின் ஊதிய அளவுகோலின் படி வெளிக்கொணர்வு மூலம் (Out Sourcing) ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் DBC மஸ்தூர் பணியாளர்களுக்கான மாவட்ட ஆட்சியரின் ஊதிய அளவு கோலின்படி ஒரு நபருக்கு ரூ.565/– வீதம் இதர செலவினங்களுடன் சேர்த்து ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 1889/2024/எச்1**

**தீர்மானம் எண் – 154 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.11**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் மோட்டார், சிறுமின் விசை பம்பு உடைப்புகள்,கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிக்கும் பணி 01.09.2024 முதல் 28.02.2025 வரை ஆறு மாதங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் :– 1708/2024/இ1**
**தீர்மானம் எண் – 155 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.12**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு – திரவக்கழிவுகள் மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொறியியல் பிரிவு மூலம் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் லாரி வாங்கி அதை நகராட்சி பகுதிகளில் நச்சுத் தொட்டிகள் சுத்தம் செய்வதற்கு நகராட்சியில் பதிவேடு பராமரித்து 14420 என்ற எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொண்டால் அவர்களின் அழைப்பு முன்னுரிமையில் புதிதாக வாங்கப்பட்ட கழிவுநீர் வாகனத்தை அனுப்பி அகற்றிட ஏதுவாக நகராட்சியில் ஓட்டுநர்கள் பணியிடம் காலியில்லாததாலும், வெளிக்கொணர்வு முறையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் விலை விகிதத்தில் 1 ஓட்டுநர், 1 துலக்குநர் இரு நபர்கள் வெளிக்கொணர்வு முறையில் நியமித்திடவும் அதற்கான செலவினத்தை

பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், 1 லோடுக்கான கட்டணம் ரூ.2000/– நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1878/2024/எச்1**

**தீர்மானம் எண் – 156 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் சீருடை பணியாளர்களுக்கு 2024 – 2025–ம் ஆண்டிற்கான சீருடை மற்றும் காலணிகள் வாங்கி வழங்க வேண்டியது உள்ளது. எனவே, மேற்கண்ட சீருடைகள், காலணிகள் மற்றும் ஷூக்கள் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், மேலும் சீருடை தையல் கூலி வழங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்குள் வாங்கி வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1882 /2024/எச்1**

**தீர்மானம் எண் – 157 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.14**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு வெளிக்கொணர்வு (Out Sourcing) மூலம் DBC பணியாளர்களைக் கொண்டு குடியிருப்புகள் கணக்கீடு செய்யும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். நாள்.19.7.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 07.08.2024 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் /நிறுவனம் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு வெளிக்கொணர்வு (Out Sourcing) மூலம் DBC பணியாளர்களைக் கொண்டு குடியிருப்புகள் கணக்கீடு செய்யும் பணி. | ரூ.25.00 | M/s.S.R.Enterprises | – | 0.37% |
| | | | M/s.Green Agro Environment Service | 3.70% | – |

**அலுவலக குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.37% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.S.R.Enterprises என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1301/2024/எச்1**

**தீர்மானம் எண் – 158 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.15**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் மோட்டார், சிறுமின் விசை பம்பு உடைப்புகள்,கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிக்கும் பணி 01.09.2024 முதல் 28.02.2025 வரை ஆறு மாதங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் :– 1708/2024/இ1**
**தீர்மானம் எண் – 159 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.16**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – பேருந்து நிலையம், மற்றும் மீன் அங்காடி பகுதிகளில் அமைந்துள்ள பொது கழிப்பறைகளை தூய்மை பாரத இயக்கம் தொடர்பான ஸ்வட்ச் சர்வேக்சன் (தூய்மை நகரங்களுக்கான தேர்வு) மூன்றாம் நபர் ஆய்வு செய்து மத்திய மாநில அரசிற்கு ஆய்வு குறித்தான அறிக்கை சமர்ப்பித்து தூய்மை இந்தியா திட்ட பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பான பணி நடைபெற உள்ளது. எனவே, மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் கருதி மேற்கண்ட இரண்டு பொது கழிப்பறைகளில் அவ்வப்பொது ஏற்படும் சிறு பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண் – 160 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.17**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை பாரிவாக்கம் ஸ்ரீ பத்மாவதி எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு எடுத்து செல்வதற்காக கனரக வாகனம் டாரஸ் டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி, டிரைவர் பேட்டா உட்பட நடை ஒன்றுக்கு) மற்றும் ஜே.சி.பி வாகனம் சப்ளை செய்தல் பணிக்கு (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு மணி நேரத்திற்கு) ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். ,நாள்.19.7.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 07.08.2024 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் /நிறுவனம் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை பாரிவாக்கம் ஸ்ரீ பத்மாவதி எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு எடுத்து செல்வதற்காக கனரக வாகனம் டாரஸ் டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி, டிரைவர் பேட்டா உட்பட நடை ஒன்றுக்கு) மற்றும் ஜே.சி.பி வாகனம் சப்ளை செய்தல் பணிக்கு (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு மணி நேரத்திற்கு). | ரூ.25.00 | M/s.Om Sakthi Enterprises | – | 0.50% |
| | | | M/s.Ameamu Enterprises | 4.13% | – |

**அலுவலக குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.50% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Om Sakthi Enterprises என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.1562/2024/எச்1**
**தீர்மானம் எண் – 161 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.MAWS Dept நாள்.23.11.2016–ன் படி பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள், மாணவ மாணவியர் சாப்பிடும் பகுதிகளை தூய்மைப்படுத்திடவும், கழிவுநீர் கால்வாய் தூய்மைப்படுத்தும் பணி, வாரம் ஒரு முறை ஒட்டடை அடிக்கும் பணி, கழிவறைகளை காலை மற்றும் மாலை வேளைகளில் தூய்மை பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி தூய்மை பணியாளர் பற்றாக்குறை உள்ளதால் தனியார் மூலம் ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளவும் அப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு அவர்களின் தினக் கூலி நிர்ணயம் ரூ. 546/– மற்றும் இதர செலவினங்களையும் சேர்த்து ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் வழிக்காட்டுதலின்படி 15 பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.12.00 இலட்சத்தை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 1880 /2024/எச்1**

**தீர்மானம் எண் – 162 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.19**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் புதியதாக நவீன சுத்திகரிப்பு நிலையம் **(RO PLANT)** அமைக்கும் பணி கீழ்காணும் விவரப்படி குடிநீர் நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.100,101,நாள்.19.7.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 20.08.2024 அன்று மின்னனு

மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | வார்டு எண்.5–ல் மகாலட்சுமி நகர் பகுதியில் உள்ள வளமீட்பு மையம் மற்றும் வார்டு எண்.30–ல் சீயோன் நகர் பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரக்குடில் மையத்தில் புதியதாக நவீன சுத்திகரிப்பு நிலையம் (RO PLANT) அமைக்கும் பணி | ரூ.4.00 | திருவா.கென்ஸ் டெக்னாலஜிஸ் எல்.எல்.பி | - | 0.03% |
| | | | திருவா.இதழினியா எண்டர்பிரைசஸ் | 2.63% | - |
| 2. | பெரியார் இராமசாமி தெருவில் நவீன குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (RO PLANT) புதுப்பித்தல் பணி. | ரூ.15.00 | திருவா.கென்ஸ் டெக்னாலஜிஸ் எல்.எல்.பி | - | 0.04% |
| | | | திருவா.இதழினியா எண்டர்பிரைசஸ் | 2.78% | - |
| 3. | பாலாஜி அவென்யூ காந்தி பூங்கா அருகில் நவீன குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (RO PLANT) புதுப்பித்தல் பணி. | ரூ.15.00 | திருவா.கென்ஸ் டெக்னாலஜிஸ் எல்.எல்.பி | - | 0.04% |
| | | | திருவா.இதழினியா எண்டர்பிரைசஸ் | 2.78% | - |

**அலுவலக குறிப்பு :-** மேற்படி வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவா.கென்ஸ் டெக்னாலஜிஸ்,எல்.எல்.பி என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1655/2024/இ1**

**தீர்மானம் எண் – 163 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் உருவாகும் மக்கும் குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரங்களை செழிப்பு என்ற விற்பனை பெயர் மூலம் விற்பனை செய்ய தேவையான விற்பனை பந்தல் மற்றும் அச்சிடப்பட்ட துணிப்பைகள் 2KG,5KG,10KG அளவுகளில் சப்ளை செய்யும் பணிக்கு 08.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான செழிப்பு என்றும் அரசு முத்திரையுடன் அச்சடிக்கப்பட்ட 2 KG, 5 KG மற்றும் 10 KG துணிப்பைகள் மற்றும் விற்பனை பந்தல் சப்ளை செய்யும் பணிக்கு. | 2.00 | AMEAMU ENTERPRISES | அதிகம் |
| | | | R.C. ENTERPRISES | குறைவு |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கி உள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்.R.C என்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க. எண்.1322/2024/எச்1**
**தீர்மானம் எண் – 164 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் அமைந்துள்ள 6 அரசு பள்ளிகள், 12 கோவில்கள், 8 அரசு கட்டிடங்களும், பூங்காக்கள், காலி மனைகள் மற்றும் மழை காலங்களில் ஜி.எஸ்.டி சாலையின் நடுப்பகுதிகளிலும் நகராட்சிக்குட்பட்ட சாலையின் ஓரங்களிலும் கால்வாய்களிலும் தேவையில்லாத இடங்களில் புல்கள் முளைப்பதை அகற்றுவதற்கு தேவையான புல் வெட்டும் இயந்திரம் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க. எண்.1895/2024/எச்1**
**தீர்மானம் எண் – 165 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.22**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை பணியில் மகாலட்சுமி நகர் பகுதியில் உள்ள வளமீட்பு மையத்தில் (RRC) உள்ள BALING MACHINE மூலமாக வரக்கூடிய நெகிழிகளின் எடையின் அளவினை கண்காணிக்க WEIGH MACHINE SCALE 300 KG அளவில் ஒரு எண்ணிக்கை வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.111 நாள்:19.07.2024–ல் அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து விலைப்புள்ளி கோரியதில் 31.07.2024–ம் தேதி கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் பெயர் | விலை |
|---|---|---|---|---|
| 1 | WEIGH MACHINE SCALE 300 KG | 30,000/- | CRSD Enterprises | ரூ.25250/- Gst.18% |
| | | | Sairam Enterprises | ரூ.25750/- Gst.18% |
| | | | Saraswathi Enterprises | ரூ.26250/- Gst.18% |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S.CRSD Enterprises நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கலாம் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.1300/2024/எச்1**
**தீர்மானம் எண் – 166 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.23**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவின் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் மருந்து வகைகள் இருப்பு குறைவாக உள்ளதாலும் வரும் மாதங்கள் மழைக்காலமாக உள்ளதால் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுப்பதற்கு தேவையான கொசு ஒழிப்பு மருந்துகளான டெமிபாஸ், பென்தியான் (அ) பேசிலஸ் துருஞ்சியன்சிஸ், பைரித்திரியம் ஆகியவைகளை வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.1619/2024/எச்1**
**தீர்மானம் எண் – 167 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.24**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் பொது கிணற்றில் நீர் சுத்திகரிப்பு நிலையம் (Softener Filtration Media 30m3/hrs) அமைக்கும் பணி கீழ்காணும் விவரப்படி குடிநீர் நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 22.08.2024 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | வார்டு எண்.9, எம்.கே நகரில் உள்ள பொது கிணற்றில் நீர் சுத்திகரிப்பு நிலையம் (Softener Filtration Media 30m3/hrs) அமைத்தல். | ரூ.24.00 | திருவா.கென்ஸ் டெக்னாலஜிஸ் எல்.எல்.பி | - | 0.05% |
| | | | திருவா.இதழினியா எண்டர்பிரைசஸ் | 3.22% | - |
| 2. | வார்டு எண்.18 நாராயணபுரத்தில் உள்ள பொது கிணற்றில் நீர் சுத்திகரிப்பு நிலையம் (Softener Filtration Media 30m3/hrs) அமைத்தல். | ரூ.24.00 | திருவா.கென்ஸ் டெக்னாலஜிஸ் எல்.எல்.பி | - | 0.05% |
| | | | திருவா.இதழினியா எண்டர்பிரைசஸ் | 3.22% | - |

**அலுவலக குறிப்பு :-** மேற்படி வரிசை எண்.1 முதல் 2 வரை உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவா.கென்ஸ் டெக்னாலஜிஸ் எல்.எல்.பி என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1655/2024/இ1**

**தீர்மானம் எண் – 168 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.25**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி நுண்ணுயிர் உரக்கூடம் (MCC) மற்றும் உலர் கழிவு சேகரிப்பு மையம் (RRC) 2024–25 ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.115, நாள்.19.7.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 19.08.2024 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் /நிறுவனம் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி நுண்ணுயிர் உரக்கூடம் (MCC) மற்றும் உலர் கழிவு சேகரிப்பு மையம் (RRC) 2024–25 ஆண்டு பராமரிப்பு பணி. | ரூ.9.00 | M/s.Green Agro Environment Service | – | 0.15% |
| | | | M/s.S.R.Enterprises | 3.53% | – |

**அலுவலக குறிப்பு :–**மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.15% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Green Agro Environment Service என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1563/2024/எச்1**

**தீர்மானம் எண் – 169 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.26**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் – 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுரடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல்தளம் குடியிருப்புக் கட்டடங்கள் அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்.18.07.2024–ன்படி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுமானத்திற்கு சுய சான்றின் அடிப்படையில் (Self-Certification) ஒற்றைச் சாளர முறையில் (Single window portal) இணைய வழி (On-line) வாயிலாக கட்டட அனுமதி வழங்குவதற்கான அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்
**ந.க.எண். 1602/2024/எப்1**

**தீர்மானம் எண் – 170 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.27**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,அரசாணை நிலை எண்.150, நாள்.12.03.2024–ன் படி நகர்ப்புற பகுதிகளில் செயல்பட்டு வரும் குழந்தைகள் மைய கட்டிடங்களை சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சிகள் மூலம் சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சிகளில் பொது நிதி அல்லது மாநில நிதி குழு அல்லது 15–வது நிதிக்குழு மான்யம் அல்லது கல்வி நிதி ஆகியவற்றின் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. மேலும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் குழந்தைகள் மைய கட்டிடங்களை பொது நிதி 2024–25–ன் கீழ் மராமத்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த பிரியா நகர் அங்கன்வாடி (33730030604) மராமத்து பணிகள். | ரூ.4.50 |
| 2. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த கூடுவாஞ்சேரி காலனி (33730030605) மராமத்து பணிகள். | ரூ.5.00 |
| 3. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த காமராஜபுரம் 1 அங்கன்வாடி (வருவாய் ஆய்வாளர் அலுவலகம் பின்புறம்) (33730030205) மராமத்து பணிகள். | ரூ.6.00 |
| 4. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த ஜெய்பீம் நகர் அங்கன்வாடி (33730030204) மராமத்து பணிகள். | ரூ.4.00 |
| 5. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த நந்திவரம் காலனி பிரதான சாலை அங்கன்வாடி (33730030218), மராமத்து பணிகள். | ரூ.4.00 |
| 6. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த சதுரப்பன்தாங்கல் அங்கன்வாடி (33730030224) மராமத்து பணிகள். | ரூ.5.00 |
| 7. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த பெரியார் நகர் அங்கன்வாடி (33730030220) மராத்து பணிகள். | ரூ.6.00 |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் :– 1573/2024/இ1**

**தீர்மானம் எண் – 171 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.28**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு தேவையான Twin Bin With Stand (Steel) சப்ளை செய்யும் பணிக்கு ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.116,நாள்.19.7.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 19.08.2024 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் /நிறுவனம் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு தேவையான Twin Bin With Stand (Steel) சப்ளை செய்யும் பணி. | ரூ.9.00 | M/s.CRSD Enterprises | – | 0.05% |
| | | | M/s.Prince Engineering Works | 2.56% | – |

**அலுவலக குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.CRSD Enterprises என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1564/2024/எச்1**

**தீர்மானம் எண் – 172 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.29**

மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.1259/அ1/2023, நாள்.23.07.2024–ன் படி நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட இரண்டு அங்கன்வாடி மையங்களுக்கு புதியதாக கழிப்பறை கட்டிடம் அமைப்பதற்கு தலா ரூ.36000/– வீதம் என ஆக மொத்தம் ரூ.72000/–க்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு அவர்களின் PFMS கணக்கில் செலுத்தப்பட்டு இந்நகராட்சி மூலம் பணிகளை மேற்கொண்டு செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | அங்கன்வாடி மையம் விவரம் | நிதி விடுவிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1. | ராஜீவ் காந்தி நகர் – கக்கன்ஜி தெரு (33730030222) | ரூ.36000/– |
| 2. | சதுரப்பன்தாங்கல் (33730030224) | ரூ.36000/– |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் :– 1617/2024/இ1**

**தீர்மானம் எண் – 173 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.30**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜி.எஸ்.டி சாலையில் (வார்டு எண்.11,புல எண்.358) மீன் அங்காடி கட்டிடம் கட்டுதல் பணி ரூ.217.00 இலட்சம் மதிப்பீட்டில் (கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2024–25 பங்குத்தொகை ரூ.108.00 இலட்சம் மற்றும் நகராட்சி பொது நிதி பங்குத்தொகை ரூ.109.00 இலட்சம்) கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2024–25 ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள 12வது கூட்ட அறிக்கையில் (12th Common Project Sanctioning and Monitoring Committee) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 16.08.2024 அன்று மாநில அளவில் மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 20.08.2024 அன்று Price Bid திறக்கப்பட்டு தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர்/ நிறுவனம் பெயர் | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜி.எஸ்.டி சாலையில் (வார்டு எண்.11,புல எண்.358) மீன் அங்காடி கட்டிடம் கட்டுதல் பணி. | ரூ.217.00 | திருவா. ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் | - | 0.03% |
| | | | திரு. எல். வெங்கடேசன் | 2.44% | - |

**அலுவலக குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவா. ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1244/ 2024/இ1**

**தீர்மானம் எண் – 174 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.31**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட தெருவோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.சதீஷ் என்பவருக்கு 01.07.2023 முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கி உத்திரவிடப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் திரு.சதீஷ் அவர்களின் 05.07.2024 தேதிய கடிதத்தில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்தின் காரணமாக சாலையோர கடைகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளதாலும், குத்தகையை தொடர்ந்து நடத்த முடியாததாலும் மேற்படி குத்தகையை மீள நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதியில் சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையான ஜி.எஸ்.டி. சாலை அமைந்துள்ளது. இச்சாலையின் போக்குவரத்து நெரிசல் காரணமாக நெடுஞ்சாலை துறையின்மூலம் சாலையோரம் இருந்த வணிக கடைகள் முழுவதும் அகற்றப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் நகரமயமாக்குதலின் ஒரு பகுதியாக நகராட்சி பகுதியில் உள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் நகராட்சி சாலைகளில் ஆங்காங்கே சாலையோரங்களில் தற்காலிக கடைகள் அமைத்து வர்த்தகம் செய்யப்பட்டுவரும் தொருவோர கடைகளும் அவ்வப்போது அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் தற்போது நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட தெருவோர வியாபாரிகளுக்கு (Street Vendors) மட்டும் அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்களுக்கு மட்டும் பொதுமக்கள்

மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு இன்றி வர்த்தகம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சி பகுதியில் முக்கிய பண்டிகைகள் மற்றும் திருவிழாக்கள் போன்ற நிகழ்வுகளில் சாலையோரம் அமர்ந்து வியாபாரம் செய்யும் அளவிற்கு எவ்வித சுற்றுலா ஸ்தலங்களும் இல்லை.

நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023. பிரிவு 291–ன் படி அரசால் அனுமதிக்கப்பட்ட தெருவோர வியாபாரிகளை தவிர மற்ற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் மற்றும் ஒழுங்குமுறைப் பாதுகாப்பு சட்டம் 2014, (மத்திய சட்டம் 7/2014)–ன் படி எந்த ஒரு பொது தெருக்களிலோ அதன் பகுதிகளிலோ வைத்து விற்பனை அல்லது வர்த்தக நடவடிக்கை இருத்தல் கூடாது என விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது. (Regulation of selling or trading activity in any public street or road margins. -- (1) No selling or trading activity by any vendor shall be carried on in any public street or part thereof or on road margin except in accordance with provisions of the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Act, 2014 (Central Act 7 of 2014) and the rules and regulations made there under.) எனவே மேற்படி விதிகளின்படி தெருவோரங்களில் அனுமதிக்கப்பட்ட தெருவோர வியாபாரிகளை தவிர மற்ற வியாபாரிகளை விற்பனை அல்லது வர்த்தகம் செய்ய தடை செய்யப்பட்டுள்ளதால் மேற்படி தெருவோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்தினை மேற்கொண்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதிலிருந்து விலக்களித்தும், இக்குத்தகையை இனிவரும் காலங்களில் தொடர்ந்து மேற்காள்ளாத வண்ணம் இரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. தற்போதுள்ள குத்தகைதாரர் தானாக முன்வந்து குத்தகை இரத்துசெய்ய கோரியுள்ளதால் 01.10.2024 முதல் அன்னாரின் குத்தகை உரிமத்தை குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு இரத்து செய்ய அனுமதி வழங்கலாம்.
2. நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023. பிரிவு 291–ன் அடிப்படையில், தெருவோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்தினை மேற்கொண்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதிலிருந்து விலக்களிக்கவும், இக்குத்தகையை இனிவரும் காலங்களில் தொடர்ந்து மேற்காள்ளாத வண்ணம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று இரத்து செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.747/2023/அ1**

**தீர்மானம் எண் – 175 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.32**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட ஜெயலட்சுமி நகர் பிரதான சாலை முதல் அமுதம் காலனி பிரதான சாலை (வடக்கு பக்கம்) வரை உள்ள மின்கம்பங்களை நகராட்சி மூலம் மாற்றியமைக்கும் பணிக்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள 16.08.2024 அன்று நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்னனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 30.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட ஜெயலட்சுமி நகர் பிரதான சாலை முதல் அமுதம் காலனி பிரதான சாலை (வடக்கு பக்கம்) வரை உள்ள மின்கம்பங்களை நகராட்சி மூலம் மாற்றியமைக்கும் பணி. | ரூ.20.00 | திருவா. ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் | - | 0.10% |
| | | | திருவா.JAYSHUN ASSOCIATES | 2.75% | - |

**அலுவலக குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.10% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவா. ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 176 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.33**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30 பரமேஸ்வரி நகர், காமேஸ்வரி நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறு பாலங்கள் அமைக்கக்கோரி பொது மக்கள்ளிடமிருந்து கடிதம் வரப்பெற்றது. மேலும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தினை நேராய்வு செய்யப்பட்டதில் பரமேஸ்வரி நகர் மற்றும் காமேஸ்வரி நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் இல்லாத காரணத்தினால், மழைக்காலங்களில் மழைநீர் வெளியேற வழி இல்லாமல் சாலையில் தேங்குகிறது. இதனால் அப்பகுதியில் பெரும் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. ஏனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி வார்டு எண்.30 பரமேஸ்வரி நகர் மற்றும் காமேஸ்வரி நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1887/2024/இ1**

**தீர்மானம் எண் – 177 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.34**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் மோட்டார்,சிறுமின் விசை பம்பு உடைப்புகள்,கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிக்கும் பணி 01.09.2024 முதல் 28.02.2025 வரை ஆறு மாதங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள 29.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் மோட்டார், சிறுமின் விசை பம்பு உடைப்புகள்,கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிக்கும் பணி. | ரூ.15.00 | திருவா.குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் | - | 0.07% |
| | | | திருவா.ஜே.பி.எஸ் எண்டர்பிரைசஸ் | 2.56% | - |

**அலுவலக குறிப்பு:-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.07% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவா.குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:– 1708/2024/இ1**

**தீர்மானம் எண் – 178 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.35**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு கொள்முதல் செய்யப்பட்ட கழிவுநீர் டேங்கர் லாரி (Cess Pool Tanker Lorry) வாகனத்திற்கு பதிவு கட்டணம் ரூ.47200/– மற்றும் வாகன காப்பீடு கட்டணம் ரூ.43650/– என ஆக மொத்தம் ரூ.90850/– தொகையினை திருவா.ABT Industries லிமிடெட், மதுரை என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வாகன பதிவு கட்டணம் மற்றும் வாகன காப்பீடு கட்டணத்திற்கான செலவின தொகையினை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1909/2023/இ1**

**தீர்மானம் எண் – 179 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.36**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான அரசு பள்ளிகளான காமராஜபுரம் முன் மாதிரி தொடக்கப்பள்ளி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (நந்திவரம்), ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி (கூடுவாஞ்சேரி), ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப்பள்ளி (நந்திவரம்) ஆகிய நான்கு பள்ளிகளில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் 1–**ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 01.09.2024 முதல் 31.08.2025 வரை ஒரு நபருக்கு ரூ.12.70/– காலை உணவு தயார் செய்து விநியோகம் செய்யும் பணிக்கு 23.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான அரசு பள்ளிகளான காமராஜபுரம் முன் மாதிரி தொடக்கப்பள்ளி,ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (நந்திவரம்), ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி (கூடுவாஞ்சேரி), ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப்பள்ளி (நந்திவரம்) ஆகிய நான்கு பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு தயார் செய்து விநியோகம் செய்யும் பணி. | ரூ.25.00 | திருவா. ஸ்ரீ முருகன் கிட்சன் | - | ரூ.12.70/– |
| | | | திருவா. ஸ்ரீ முருகன் கேட்டரிங் | ரூ.17.00/– | - |

**அலுவலக குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.12.70/– என குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவா. ஸ்ரீ முருகன் கிட்சன் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.973/2022/இ1**

**தீர்மானம் எண் – 180 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.37**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2–ல் உள்ள ராகவேந்திரா காலனி பூங்காவில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 16 மீ மேடை உயரம் கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்தல் பணி ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆறாவது மாநில நிதிக்குழு ஆணைய மான்யம் 2023–24–ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள மாவட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தினத்தந்தி நாளிதழில் 20.06.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியீடு செய்யப்பட்டதற்கான செலவின தொகை ரூ.37691/–ஐ திருவா.Adwave Advertising Private Limited, சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான விளம்பர செலவினத்தை பொது நிதி 2024–2025 ஆம் ஆண்டின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2719/2023/இ1**

**தீர்மானம் எண் – 181 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.38**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட மகாலட்சமி நகர் பிரதான சாலை முதல் ஜெயலட்சுமி பிரதான சாலை (வடக்கு பக்கம்) வரை உள்ள மின்கம்பங்களை நகராட்சி மூலம் மாற்றியமைக்கும் பணி.க்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.110 ,நாள்.19.07.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 06.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட மகாலட்சமி நகர் பிரதான சாலை முதல் ஜெயலட்சுமி பிரதான சாலை (வடக்கு பக்கம்) வரை உள்ள மின்கம்பங்களை நகராட்சி மூலம் மாற்றியமைக்கும் பணி. | ரூ.10.00 | திருவா. ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் | - | 0.10% |
| | | | திருவா.JAYSHUN ASSOCIATES | 2.75% | - |

**அலுவலக குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.10% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவா. ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 182 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.39**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28–ல் உள்ள குமரன் நகர் பகுதியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 16 மீ மேடை உயரம் கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்தல் பணி ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆறாவது மாநில நிதிக்குழு ஆணைய மான்யம் 2023–24–ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள மாவட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டு தினகரன் நாளிதழில் **20.06.2024** அன்று ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியீடு செய்யப்பட்டதற்கான செலவின தொகை ரூ.**33751/–**ஐ திருவா.Adwave Advertising Private Limited, சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான விளம்பர செலவினத்தை பொது நிதி **2024–2025** ஆம் ஆண்டின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2719/2023/இ1**

**தீர்மானம் எண் – 183 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.40**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**16** முதல் **30** வரை உள்ள பகுதிகளில் மோட்டார்,சிறுமின் விசை பம்பு உடைப்புகள்,கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிக்கும் பணி **01.09.2024** முதல் **28.02.2025** வரை ஆறு மாதங்களுக்கு ரூ.**15.00** இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதி **2024–25**–ன் கீழ் மேற்கொள்ள **29.08.2024** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் மோட்டார், சிறுமின் விசை பம்பு உடைப்புகள்,கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிக்கும் பணி. | ரூ.15.00 | திருவா.ஜே.பி.எஸ் எண்டர்பிரைசஸ் | - | 0.04% |
| | | | திருவா.குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் | 2.78% | - |

**அலுவலக குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.04% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவா.ஜே.பி.எஸ் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1708/2024/இ1**

**தீர்மானம் எண் – 184 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.41**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு தேவையான (Wood Chippers (1 Static) Wood Chippers (1 Mobile) சப்ளை செய்யும் பணிக்கு ரூ.**9.85** இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி **2024–25**–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.**110**, நாள்.**19.7.2024**–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து **19.08.2024** அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் / நிறுவனம் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு தேவையான (Wood Chippers (1 Static) Wood Chippers (1 Mobile) சப்ளை செய்யும் பணி. | ரூ.9.85 | M/s.Green Agro Environment Service | – | 0.12% |
| | | | M/s.S.R.Enterprises | 3.72% | – |

**அலுவலக குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.12% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Green Agro Environment Service என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1299/2024/எச்1**

**தீர்மானம் எண் – 185 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.42**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கான கடைகளை இடித்துவிட்டு அதற்கு பதிலாக புதிய வணிக வளாக கடைகள் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| 1) | மீன் கடைகள் | .. | 44 கடைகள் |
| 2) | வணிக வளாக கடைகள் | .. | 30 கடைகள் |
| 3) | NREP கடைகள் | .. | 10 கடைகள் |
| | **மொத்தம்** | .. | **84 கடைகள்** |

மேற்படி கடைகளை இடித்துவிட்டு புதிய கடைகள் கட்டமைக்கப்பட உள்ளதால், இக்கடைகளை இடிப்பதற்கு ஏதுவாக குத்தகைதாரர்கள் வசம் உள்ள குத்தகை கடைகளை உடன் காலிசெய்து நகராட்சி வசம் ஒப்படைப்பது குறித்த 16.09.2024 அன்று மேற்படி குத்தகைதாரர்களுடன் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆலோசனை கூட்டத்தில் குத்தகைதாரர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின்படி மீன் மற்றும் கறிக்கடைகளுக்கு மாற்றும் இடம் வழங்க கோரப்பட்டது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட நெல்லிக்குப்பம் சாலையில் உள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரில் உள்ள அரசுக்கு சொந்தமான காலியிடத்தில் மேற்படி மீன் மற்றும் கறிக்கடைகளுக்கான குத்தகைதாரர்களுக்கு மட்டும் வியாபாரம் செய்துகொள்ள அனுமதிக்கவும், இந்த இடத்தில் தற்காலிக கட்டமைப்புகளை மேற்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி இடத்தில் தற்காலிக கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கான செலவினத்தை சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களிடமிருந்து வாடகையாக வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி இடத்தினை நகராட்சியால் தற்காலிகமாக பயன்படுத்திக்கொள்ள சம்பந்தப்பட்ட வருவாய் துறையின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் – 186 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.43**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியானது,பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தி பின்னர் இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம், நமக்கு நாமே திட்டம், கலைஞர் நகர்புர மேம்பாட்டு திட்டம், Swachh Bharat Mission (Urban) 2.0 மற்றும் பொதுநிதியின் கீழ்பல்வேறு வளர்ச்சிபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யவும், மேற்பார்வையிடவும், திட்டப்பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்று வரவும், மற்றும் வளர்ச்சி பணிகள் தொடர்பான இதர பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு உத்தேசமாக 5 எண்ணிக்கை தொழில்நுட்ப உதவியாளர்களை வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒரு வருடத்திற்கு (01.09.2023 முதல் 31.08.2024 வரை) தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையின் 2023–24 ஆம் ஆண்டிற்கான அட்டவணை விலைப்படி ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியமர்த்திக்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.95, நாள்.07.08.2023–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து 01.09.2023 முதல் 31.03.2024 வரை நான்கு தொழில்நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்தனர்.மேலும் நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் நடைபெறும் திட்ட பணிகள் மற்றும் பொதுநிதி பணிகளை மேற்பார்வையிட கூடுதலாக ஒரு தொழில்நுட்ப உதவியாளரை வெளிக்கொணர்வு அடிப்படியில் பணியமர்த்திட தெரிவித்ததனை தொடர்ந்து 01.04.2024 முதல் ஒரு தொழில்நுட்ப உதவியாளரை பணியமர்த்தப்பட்டது. இதனால் ஏற்கனவே 01.09.2023 முதல் 31.08.2024 வரை நிர்வாக அனுமதி வழங்கிய ஊதிய செலவின தொகையைவிட கூடுதலாக ஆகும் ஊதிய செலவின தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் மற்றும் 01.09.2024 முதல் 30.09.2024 வரை ஒரு மாதத்திற்கு ஊதியம் வழங்க ஏற்படும் உத்தேச செலவினம் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு என ஆக மொத்தம் ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:– 777/2023/இ1**

**தீர்மானம் எண் – 187 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.44**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பல்வேறு காரணங்களுக்கு தனி நபர்கள் ஆணையாளர், அரசு செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி தொடர்புடைய அலுவலர்கள் மீது சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் பிற நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்படுகிறது. அவ்வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக உரிய வழக்கறிஞர்களை வழக்கு நடத்த அனுமதிக்காகவும் அவ்வழக்கிற்கு உரிய வழக்கறிஞர் கட்டணம் செலுத்த 2024–2025 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சம் தோராய செலவினம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** அவசர அவசியம் கருதி 2024–2025ம் ஆண்டிற்கான வழக்கறிஞர் கட்டணத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.927/2024/எப்1

**தீர்மானம் எண் – 188 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.45**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி உருவாகும் கழிவுகளை தரம் பிரித்து மக்கும் குப்பைகளை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30 சீயோன் நகரில் ஏற்படுத்தப்பட்ட நுண்ணுரக்குடிலில் உரமாக்கும் பணி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. தற்போது கையிருப்பாக இயற்கை உரம் 20.00 மெட்ரிக் டன்னில் உள்ளது. அந்த உரத்தினை சேமித்து வைக்க ஏதுவாக உலர்த்திடவும்,காய வைத்திடவும், இருப்பு வைப்பதற்கும் இந்நகராட்சி இடத்தில் வார்டு எண்.30 சீயோன் நகர் பகுதியில் நுண்ணுயிர் உரக்குடில் மையம் அமைக்கும் பணிக்கு ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான விளம்பர செலவினத்தை பொது நிதி 2024–2025 ஆம் ஆண்டின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1766/2024/இ1**

**தீர்மானம் எண் – 189 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.46**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியானது,பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தி பின்னர் இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம், நமக்கு நாமே திட்டம், கலைஞர் நகர்புர மேம்பாட்டு திட்டம், Swachh Bharat Mission (Urban) 2.0,6 வது மாநில நிதிக்குழு ஆணையம் மற்றும் பொதுநிதியின் கீழ்பல்வேறு வளர்ச்சிபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யவும், மேற்பார்வையிடவும், திட்டப்பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்று வரவும் மற்றும் வளர்ச்சி பணிகள் தொடர்பான இதர பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு உத்தேசமாக 5 எண்ணிக்கை தொழில்நுட்ப உதவியாளர்களை வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒரு வருடத்திற்கு (01.10.2024 முதல் 30.09.2025 வரை) தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையின் 2024–25 ஆம் ஆண்டிற்கான அட்டவணை விலைப்படி ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியமர்த்திக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்:– 777/2023/இ1**

**தீர்மானம் எண் – 190 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.47**

இந்நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா இயக்கம் தூய்மையே சேவை 2024 தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட அறிவுறுத்தியுள்ளதின் பேரில் பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்புடன் தீவிர கூட்டு தூய்மை பணிகள் (பொது இடங்கள்), பெருமளவில் உறுதிமொழி ஏற்பு, விழிப்புணர்வு ஊர்வலங்கள், மனித சங்கிலி, மரம் நடுதல், இருவகையான தரம் பிரிக்கும் குப்பை தொட்டிகள் நிறுவுதல், குப்பை கொட்டாமல் இருக்க

விழிப்புணர்வு பலகைகள் நடுதல், நீர்நிலைகள் தூய்மை செய்தல், பிளாஸ்டிக் மாற்று பொருள் கண்காட்சி, சுவர் விளம்பரங்கள், வீதி நாடகங்கள், நிகழ்விட உரக்குடில் செயல் விளக்கம், பள்ளி மாணவ மாணவியர் இடையே விழிப்புணர்வு ஓவியம்,கட்டுரை, பேச்சுப் போட்டி நடத்துதல், தொடர்ந்து குப்பை கொட்டும் இடங்களை மாற்றம் செய்தல், பூங்காக்கள் சாலை நடுப்பகுதிகளில் குப்பையிலிருந்து மாற்று பொருட்கள் நிறுவுதல், குப்பை உருவாகாத உணவு நிகழ்ச்சி (Zero Waste Event), தூய்மை பணியாளர்களுக்கு மருத்துவ முகாம்கள் மற்றும் விருது வழங்கும் நிகழ்ச்சி போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டியது அவசியமாகிறது. மேலும் மேற்கண்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பொது மக்கள்,தன்னார்வலர்கள்,குடியிருப்போர் நலசங்கங்கள், மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு தேநீர்,பிஸ்கட்,தண்ணீர்,பழச்சாறுகள், விளம்பர பதாகைகள்,உணவு,பந்தல் அமைப்பு,ஒலிப் பெருக்கி மற்றும் மேற்கண்ட பணிக்கு தேவையான பொருட்களை வாங்கி வழங்கிடவும் அதற்குண்டான செலவினத்தொகை ரூ.4.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1997/2024/எச்1**

**தீர்மானம் எண் – 191 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.48

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சியில் 78 வது சுதந்திர தினத்தையொட்டி நகராட்சி அலுவலக கட்டிடத்தை சுற்றி சீரியல் செட், பல்பு, தோரணம், பந்தல் (15 x 20 அளவு) மைக், ஆம்ப்ளிபையர் மற்றும் ஸ்பீக்கர் ஆகியவை (13.08.2024 முதல் 15.08.2024 வரை) மூன்று நாட்களுக்கு மற்றும் தேசிய கொடி,ஸ்பெஷல் பேட்ஜ் ஆகியவை 15.08.2024 அன்று ஒரு நாள் மட்டும் (ஆட்கள் கூலி உட்பட) வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.20000/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 777/2024/இ1**

**தீர்மானம் எண் – 192 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.49

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சியில் 78 வது சுதந்திர தினத்தையொட்டி நகராட்சி அலுவலக கட்டிடத்தை சுற்றி சீரியல் செட், பல்பு, தோரணம், பந்தல் (15 x 20 அளவு) மைக், ஆம்ப்ளிபையர் மற்றும் ஸ்பீக்கர் ஆகியவை (13.08.2024 முதல் 15.08.2024 வரை) மூன்று நாட்களுக்கு மற்றும் தேசிய கொடி,ஸ்பெஷல் பேட்ஜ் ஆகியவை 15.08.2024 அன்று ஒரு நாள் மட்டும் (ஆட்கள் கூலி உட்பட) வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணிகள் மேற்கொள்ள 12.08.2024 அன்று மூடி முத்திரையிடப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளிகள் | | |
|---|---|---|---|---|
| | | திருவா.ராம் பிரதர்ஸ் 28 | திருவா.சுரேஷ் Eventers | திருவா. விஜயலக்ஷ்மி எண்டர்பிரைசஸ் |
| 1 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சியில் 78 வது சுதந்திர தினத்தையொட்டி நகராட்சி அலுவலக கட்டிடத்தை சுற்றி சீரியல் செட், பல்பு, தோரணம், பந்தல் (15 x 20 அளவு) மைக், ஆம்ப்ளிபையர் மற்றும் ஸ்பீக்கர் ஆகியவை (13.08.2024 முதல் 15.08.2024 வரை) மூன்று நாட்களுக்கு மற்றும் தேசிய கொடி,ஸ்பெஷல் பேட்ஜ் ஆகியவை 15.08 .2024 அன்று ஒரு நாள் மட்டும் (ஆட்கள் கூலி உட்பட) வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணி. | 19000.00 | 27000.00 | 28000.00 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **திருவா.ராம் பிரதர்ஸ் 28, நந்திவரம் – கூடுவாஞ்சேரி** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண் – 193 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.50

வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வார்டுகளில் உள்ள பகுதிகளில் கீழ்கண்ட பணிகளை பொது நிதி பணிகள் 2024–2025–ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வார்டுகளில் அடர்ந்து வளர்ந்துள்ள முட்செடிகளை அகற்றவும், கால்வாய் தூர்வாரி கழிவுமண் அகற்றவும் தனியார் ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் பணியினை மேற்கொள்ளுதல் | 5.00 |
| 2 | வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட 16 முதல் 30 வார்டுகளில் அடர்ந்து வளர்ந்துள்ள முட்செடிகளை அகற்றவும், கால்வாய் தூர்வாரி கழிவுமண் அகற்றவும் தனியார் ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் பணியினை மேற்கொள்ளுதல் | 5.00 |
| 3 | வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் அடர்ந்து வளர்ந்துள்ள முட்செடிகளை அகற்றவும், கால்வாய் தூர்வாரி கழிவுமண் அகற்றவும் தனியார் பொக்லைன் இயந்திரம் மூலம் பணியினை மேற்கொள்ளுதல் | 6.00 |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 4 | வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட இரயில்வே தரைபாலம், தாழ்வான வார்டுகளில் சேகரமாகும் மழைநீர் தேங்கும் நிலையில் அதனை உடனுக்குடன் அகற்றவும், தனியார் மூலம் ஆயில் இஞ்சின் மோட்டார் மூலம் மழைநீரை அகற்றும் பணி | 7.50 |
| 5 | வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கும், பெருமாட்டுநல்லூர் தலைமை நீரேற்று நிலையம் ஆகிய இடங்களில் தனியார் ஜெனரேட்டர்கள் வாடகை மூலம் பணியினை மேற்கொள்ளுதல் | 2.50 |
| 6 | வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள ஏரிகக்கரைகள் நகராட்சி குளங்கள் உடைப்பு ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மணல் மூட்டைகள் மற்றும் சிமெண்ட் பைப்கொண்டு சரி செய்யும் பணி | 15.00 |
| 7 | வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கையாக நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குண்டும் குழியும்மாக உள்ள சாலைகளில் (Wet Mix Macadam) வைத்து சமம் செய்யும் பணி | 12.00 |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 194 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.51**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பெருமாட்டுநல்லூர் புதிய மற்றும் பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார் அறை, நந்திவரம் தாங்கல் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைத்தல் பணி ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 195 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.52**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட திரௌபதியம்மன் கோயில் தெருவில் உள்ள நந்திவரம் நடுநிலைப் பள்ளி முதல் தளத்தில் கழிப்பறை கட்டிடம் கட்டுதல் பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024 –25–ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 196 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.53**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜர் தெருவில் உள்ள கூடுவாஞ்சேரி நடுநிலைப் பள்ளி முதல் தளத்தில் கழிப்பறை கட்டிடம் கட்டுதல் பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024 – 25–ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 197 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.54**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜி.எஸ்.டி சாலையில் (வார்டு எண்.11,புல எண்.358) மீன் அங்காடி கட்டிடம் கட்டுதல் பணி ரூ.217.00 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2024–25 ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள 12வது கூட்ட அறிக்கையில் (12th Common Project Sanctioning and Monitoring Committee) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 16.08.2024 அன்று மாநில அளவில் மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திருவா.குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திற்கு 16.09.2024 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது பணி துவங்கும் நிலையில் உள்ளது. மேற்படி பணி நடைபெறவுள்ள இடத்தில் ஏற்கனவே உள்ள 84 கடைகளை இடித்துவிட்டு, புதியதாக அமைக்கவுள்ளதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 –ல் உள்ள அறிவுசார் நூலகம் அருகில் தற்காலிகமாக மீன் அங்காடி கட்டிடம் கட்டுதல் பணி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1866/2024/இ1**

**தீர்மானம் எண் – 198 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.55**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21–ல் உள்ள சார் பதிவாளர் அலுவலகம் அருகில் மகளிர் தங்கும் விடுதி அமைந்துள்ளது. இவ்விடுதியில் சுமார் 120 நபர்கள் தங்கி வெளியூர் சென்று பணிபுரிந்து வருகின்றனர். மேலும் இவ்விடுதியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் செப்டிக் டேங்க் நீர் நிரம்பி சாலையில் வழிந்தோடுகிறது. அப்பகுதியில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகம், அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றிற்கு செல்வோர்க்கு பிரதான சாலையாக இச்சாலை அமைத்துள்ளது. மேலும் இச்சாலை வழியாக பயணிக்கும் பொதுமக்கள் மற்றும் மாணவ,மாணவியர்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது என தொடர்ச்சியாக பொதுமக்கள் மற்றும் நகரமன்ற உறுப்பினரிடமிருந்து புகார் வரப்பெற்றது. புகார் தெரிவிக்கப்பட்ட மேற்படி இடத்தினை கள ஆய்வு செய்யப்பட்டதில் அவ்விடத்தில் வடிகால்வாய் அமைப்பது அவசியமாகிறது. எனவே

பொதுமக்கள் மற்றும் மாணவ,மாணவிர்களின் சுகாதார நலன் கருதி அவ்விடத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1852/2024/இ1**

**தீர்மானம் எண் – 199 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.56**

வடக்கிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காமராஜபுரம் முன் மாதிரி பள்ளி வெள்ள நிவாரண மையத்தில் LED விளக்குகள் (Flood Light), ஜெனரேட்டர், அத்தியாவசிய பொருட்கள் தற்காலிகமாக சப்ளை செய்தல் மற்றும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரை பகுதிகளில் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளில் Wet Mix Macadam வைத்து சமம் செய்தல், தாழ்வாக உள்ள மரங்களை மரம் அரவை இயந்திரம் மற்றும் ஆட்கள் மூலம் அப்புறப்படுத்துதல் பணி ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 200 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.57**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட நந்திவரம் காலனி பிரதான சாலை செல்லும் வழியில் அமைத்துள்ள குடியிருப்புகள் 20 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்டு வசித்து வருகின்றனர். மேலும் அப்பகுதியில் சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டதால், மேற்படி குடியிருப்பு வீடுகளானது சாலை மற்றும் மழைநீர் வடிகாலினை விட பள்ளத்தில் உள்ளது. இந்த சாலையானது கூடுவாஞ்சேரி மற்றும் நந்திவரம் ஆகிய பகுதிகளிலிருந்து எஸ்.ஆர்.எம் பள்ளி, வேலம்மாள் பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் மற்றும் அலுவலகங்கள் செல்லும் பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர். மேலும் இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சென்று வர சாலையின் அகலம் போதுமானதாக இல்லை, ஏற்கனவே அமைந்துள்ள பழைய மழைநீர் வடிகால் சாலையின் மட்டத்திலிருந்து இரண்டு அடி முதல் மூன்று அடி வரை பள்ளத்தில் அமைந்துள்ளது. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் நேரடி ஆய்வின்போது கீழ்கண்ட பகுதிகளில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு அறிவுரை வழங்கினர். எனவே கீழ்கண்ட பகுதிகளில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு மதிப்பீட்டினை பார்வையிட்டு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நந்திவரம் காலனி பிரதான சாலை (நாராயணபுரம் சந்திப்பு) முதல் வள்ளுவர் காலனி வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 37.50 |
| 2. | ராணி அண்ணா நகர் 3வது தெரு முதல் திரௌபதியம்மன் கோயில் தெரு வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 20.00 |

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 201 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.58**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட மரகதசந்திரசேகர் தெரு பிரதான சாலை செல்லும் வழியில் அமைத்துள்ள குடியிருப்புகள் 20 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்டு வசித்து வருகின்றனர். மேலும் அப்பகுதியில் சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டதால், மேற்படி குடியிருப்பு வீடுகளானது சாலை மற்றும் மழைநீர் வடிகாலினை விட பள்ளத்தில் உள்ளது. இந்த சாலையானது கூடுவாஞ்சேரி மற்றும் நந்திவரம் ஆகிய பகுதிகளிலிருந்து அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, காமராஜபுரம் முன் மாதிரி தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் மற்றும் அலுவலகங்கள் செல்லும் பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர். மேலும் இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சென்று வர சாலையின் அகலம் போதுமானதாக இல்லை, ஏற்கனவே அமைந்துள்ள பழைய மழைநீர் வடிகால் சாலையின் மட்டத்திலிருந்து இரண்டு அடி முதல் மூன்று அடி வரை பள்ளத்தில் அமைந்துள்ளது. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் நேரடி ஆய்வின்போது கீழ்கண்ட பகுதிகளில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு அறிவுரை வழங்கினர். எனவே கீழ்கண்ட பகுதிகளில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு மதிப்பீட்டினை பார்வையிட்டு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நெல்லிக்குப்பம் சாலை முதல் செங்கனியம்மன் கோயில் வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 39.00 |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 2. | நெல்லிக்குப்பம் சாலை முதல் மரகதாசந்திரசேகர் தெரு பிரதான சாலை (வள்ளுவர் காலனி) வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 25.00 |

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 202 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண். 59**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8,புல எண்.370–ல் உள்ள கன்னியப்பா நகர் சுடுகாட்டில் சுற்றுச்சுவர் (Fencing), மின் சாதனங்கள் மற்றும் அணுகு சாலை அமைத்தல் பணி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 203 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண். 60**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 காந்தி தெரு பகுதியில் உள்ள கிளை நூலகத்தில் சுற்றுச்சுவர், கவர் ஸ்லாப் மற்றும் பேவர் பிளாக் தளம் அமைத்தல் பணி ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 204 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண். 61**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏரிக்கரை தெரு முதல் வட்டாச்சியர் அலுவலகம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 205 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**<u>பொருள் எண். 62</u>**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட இரயில்வே நிலையம் சாலையில் உள்ள உயர் கோபுர விளக்கிற்கு 120W LED Flood Light மாற்றி அமைக்கும் பணி ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 206 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**<u>பொருள் எண். 63</u>**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15-ல் உள்ள கூடுவாஞ்சேரி குளத்தில் நடைபாதை, SS HANDRAILS, மின்விளக்குகள், இருக்கைகள், பசுமை மரக்கன்றுகள் அமைத்தல் பணி ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 207 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**<u>பொருள் எண். 64</u>**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கணினி இயக்குபவர்கள் – 5 நபர்கள், ஓட்டுநர் – 3 நபர்கள், பூங்கா பராமரிப்பிற்கு – 5 நபர்கள், பெருமட்டுநல்லூர் தலைமை நீர் நிலையத்திற்கு – 5 நபர்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் – 7 நபர்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் RO Plant இயக்குபவர் – 6 நபர்கள், தோட்டக்காரர்–2 நபர்கள், பூங்கா காவலர்–4 நபர்கள் மற்றும் இரவு காவலர்–1 நபர்கள் என ஆகிய பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களின் ஊதிய அளவுகோலின்படி வெளிக்கொணர்வு பணி (Out Sourcing) (01.03.2024 முதல் 31.03.2025 வரை) ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின் கீழ் நகர்மன்ற தீர்மான எண்.23, நாள்.03.01.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனால் ஏற்கனவே (01.03.2024 முதல் 31.03.2025 வரை நிர்வாக அனுமதி வழங்கிய ஊதிய செலவின

தொகையைவிட 01.02.2025 முதல் 30.04.2025 வரை இரண்டு மாதத்திற்கு ஊதியம் வழங்க ஏற்படும் உத்தேச செலவினம் தொகை ரூ.11.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்:– 777/2023/இ1**

**தீர்மானம் எண் – 208 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண். 65**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5-ல் உள்ள மகாலட்சுமி நகர் குறுக்கு தெருக்களில் சிறுபாலங்கள் அமைத்தல் பணி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண் – 209 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண். 66**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் மோட்டார்,சிறுமின் விசை பம்பு உடைப்புகள்,கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிக்கும் பணி 01.09.2024 முதல் 28.02.2025 வரை ஆறு மாதங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி நகர்மன்ற தீர்மான எண்.155, நாள்.23.09.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனால் ஏற்கனவே 01.09.2024 முதல் 28.02.2025 வரை ஆறு மாதங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கிய ஊதிய செலவின தொகையைவிட 01.02.2025 முதல் 28.02.2025 வரை ஒரு மாதத்திற்கு வழங்க கூடுதல் செலவினம் ஏற்படுவதால் உத்தேச செலவினம் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:– 777/2023/இ1**

**தீர்மானம் எண் – 210 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண். 67**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் மோட்டார்,சிறுமின் விசை பம்பு உடைப்புகள்,கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை பராமரிக்கும் பணி 01.09.2024 முதல் 28.02.2025 வரை ஆறு மாதங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதி 2024–25–ன் கீழ் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி நகர்மன்ற தீர்மான எண்.159, நாள்.23.09.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனால் ஏற்கனவே 01.09.2024 முதல் 28.02.2025 வரை ஆறு மாதங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கிய செலவின தொகையைவிட 01.02.2025 முதல் 28.02.2025 வரை ஒரு மாதத்திற்கு ஊதியம் வழங்க கூடுதல் செலவினம் ஏற்படுவதால் உத்தேச செலவினம் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:– 777/2023/இ1**

**தீர்மானம் எண் – 211 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண். 68**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது நிலவி வரும் கோடை வறட்சி காரணமாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்க இயலாத நிலை உள்ளது. இதனை சமாளிக்கும் பொருட்டு வார்டு பொதுமக்களுக்கு தனியார் டிராக்டர் வாகனங்களை கொண்டு ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை குடிநீர் விநியோகம் செய்திட இந்நகரமன்ற தீர்மான எண்.86, நாள்.13.03.2024–ன் படி 3 எண்ணிக்கையிலான குடிநீர் டிராக்டர்களுக்கு மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி குடிநீர் விநியோகம் செய்யும் 3 எண்ணிக்கையிலான குடிநீர் டிராக்டர்களுக்கு பணிக்காலம் ஜூன் 2024 அன்று முடிவடையவுள்ளதால், மேற்படி பணிகளை ஏற்கனவே மேற்கொண்ட ஒப்பந்ததாரர்கள் மூலம் ஜூலை 2024 முதல் ஆகஸ்ட் 2024 வரை இரண்டு மாதங்களுக்கு உரிய விலைவிகிதத்தில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கான காலம் கீழ்காணும் விவரப்படி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. என | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி நீட்டிப்பு கா | மதிப்பீடு தொன ரூ. (இலட்சத்தி |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்–2,3 மற்றும் 4 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல். | திரு. L.வெங்கடேசன் | (ஜூலை 2024 முதல் ஆகஸ்ட் 2024 வரை) | ரூ.5.00 |
| 2. | வார்டு எண்–15,16 மற்றும் 23 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல். | திரு.L.புண்ணியக்கோட்டி | (ஜூலை 2024 முதல் ஆகஸ்ட் 2024 வரை) | ரூ.5.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | வார்டு எண்–24, 25 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல். | திரு.L.வெங்கடேசன் | (ஜூலை 2024 முதல் ஆகஸ்ட் 2024 வரை) | ரூ.5.00 |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுட பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்:– 782/2022/இ1**

**தீர்மானம் எண் – 212 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**ஒம் / M.K.D. கார்த்திக்**

**நகர்மன்ற தலைவர்**

**நந்திவரம்-கூடுவாஞ்சேரி நகராட்சி**